# நோய் எதிர்ப்புத்திறனூட்டல்

20 வயதுக்குக் குறைவானதொரு பிள்ளைக்குரிய குடும்பக் கொடுப்பனவு ஒன்றைப் பெறுவதற்கு அவர்களுக்கு இன்றுவரை வழங்கப்பட வேண்டிய நோய் எதிர்ப்புத்திறன் மருந்து வழங்கப்பட்டுள்ளமையினை நீங்கள் உறுதிப்படுத்தல் அவசியமாகும்.

## இதனுடன் சம்பந்தப்படுகின்ற கொடுப்பனவுகள் யாவை?

- Child Care Benefit
- Child Care Rebate, மற்றும்
- Family Tax Benefit Part A supplement

இந்த மாற்றங்கள் Grandparent Child Care Benefit, Special Child Care Benefit அல்லது Jobs, Education and Training Child Care Fee Assistance ஆகியவற்றைப் பெறுகின்ற வாடிக்கையாளர்களைப் பாதிக்கும்.

## நோய் எதிர்ப்புத் திறன் எதற்கு அவசியமாகின்றது?

நோய் எதிர்ப்பூத்திறனூட்டலானது ஆபத்துமிக்க நோய்களிலிருந்து உங்களையும் உங்களது பிள்ளைகளையும் பாதுகாத்து ஆரோக்கியத்தைப் பேணுகின்றது. இது எளிமையானது,, பாதுகாப்பானது மற்றும் நல்ல பயனளிகக்
கூடியது.

## நான் என்ன செய்யவேண்டும்?

நோய் எதிர்ப்புத்திறனூட்டலை எதிர்கொள்வதற்கு உங்களது பிள்ளை பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்தல் வேண்டும்:

- ஆரம்ப சிறுபராயத்திலிருந்தான நோய் எதிர்ப்பூட்டலை தவறாது பெற்றிருத்தல், அல்லது
- ஒரு மருத்துவ விதிவிலக்கினைக் கொண்டிருத்தல்.

நாங்கள் உங்களது பிள்ளையின் நோய் எதிர்ப்புத்திறனூட்டல் பற்றிய விபரங்களை அவர்களது Medicare விபரங்களைப் பயன்படுத்தி Australian Immunisation Register இல் பரீட்சித்துப் பார்க்கவுள்ளோம்.

Medicare வசதியைப் பெற தகைமையற்ற பிள்ளைகள், அவர்களுக்கானதொரு தடுப்புமருந்து பற்றிய விபரங்களை தடுப்பு மருந்து வழங்குபவர்கள் (ஒரு பொது மருத்துவர் உள்ளடங்கலாக) Australian Immunisation Register இற்கு அனுப்பிய பின்னர் Immunisation Register இல் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

உங்களது பிள்ளைக்கு தடுப்பு மருந்து வழங்க முடியாமைக்கானதொரு ஏதேனும் மருத்துவக் காரணம் இருக்குமிடத்து, அது தொடர்பில் உங்களது பொது மருத்துவருக்குத் தெரிவிக்கவும்.

## எனது பிள்ளை நாளது வரையிலான நோய் எதிர்ப்புத்திறனூட்டலைப் பெற்றுள்ளாரா என்பதனை நான் அறிந்துகொள்வது எவ்வாறு?

நீங்கள் பின்வரும் வழிமுறைகளில் உங்களது பிள்ளையின் நோய் எதிர்ப்புத்திறனூட்டல் பற்றிய வரலாற்றுக் கூற்றினை பரீட்சித்துப் பார்க்க முடியும்:

- myGov ஊடான உங்களது Medicare இணையக் கணக்கு. நீங்கள் myGov கணக்கு ஒன்றினைக் கொண்டிருக்கவில்லையாயின், அதனைத் தயாரித்து Medicare இணையக் கணக்குடன் தொடர்புபடுத்தவும்.
- கையடக்கத்தொலைபேசிக்கான Express Plus Medicare எனும் பிரயோகம். இப்பிரயோகம் உங்களிடம் இல்லையாயின், App Store, Google Play™ இலிருந்து அதனைத் தரவிறக்கம் செய்து கொள்ளவும். மேலும் தெரிவுசெய்யப்பட்ட Windows 10 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கணினிகளிலிருந்தும் தரவிறக்கிப் பெற்றுக்கொள்ளலாம்

14 வயதுடைய அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் பின்வரும் வழிமுறைகள் மூலம் நோய்த் தடுப்புத்திறனூட்டல் பற்றிய வரலாற்றுக் கூற்றினை பார்வையிட முடியும்:

- myGov ஊடான தமக்குரிய Medicare இணையக் கணக்கினைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது அக்கணக்கினை உருவாக்கிப் பயன்படுத்துவதன் மூலம்
- Express Plus Medicare எனும் கையடக்கத் தொலைபேசிப் பிரயோகத்தைப் பயன்படுத்துவதன் மூலம், அல்லது
- **1800 653 809** இற்கு அழைப்பினை ஏற்படுத்துவதன் மூலம்.

உங்களது பிள்ளையின் நோய்த் தடுப்புத்திறனூட்டல் பற்றிய வரலாற்றுக் கூற்றில் குறித்த தகவல்கள் இல்லாதிருக்கும் பட்சத்தில், அவற்றை Australian Immunisation Register இற்கு அனுப்பி வைக்குமாறு உங்களது தடுப்புமருந்து வழங்குனரைக் கேட்கவும்.

## வெளிநாடுகளில் நோய் எதிர்ப்புத்திறனூட்டல் பெற்றிருத்தல்

உங்களது பிள்ளை நோய் எதிர்ப்புத்திறனூட்டலை வெளிநாடுகளில் பெற்றிருப்பின், அதற்கான சான்றினை அவுஸ்திரேலிய தடுப்புமருந்து வழங்குனரிடம் சமர்ப்பிக்கவும். உங்களது பிள்ளைக்கு Australian National Immunisation Program Scheduleஐ எதிர்கொள்ளும் வகையில் உரிய தடுப்புமருந்து வழங்கப்பட்டுள்ளதா என்பது பற்றி அவர்கள் பரீட்சித்துப் பார்ப்பார்கள்.

உங்களது பிள்ளை National Immunisation Program Schedule ஐ நிறைவு செய்தால் உங்களது அவுஸ்திரேலிய தடுப்புமருந்து வழங்குனர் குறித்த தகவல்களைக் கொண்டு Australian Immunisation Register ஐ நாளது வரையிலாக்குவார்.

உங்களது பிள்ளை National Immunisation Program Schedule ஐ நிறைவு செய்/யவில்லையென்றால், தடுப்புமருந்து வழங்குனர் தடுப்புமருந்துகள் குறித்துக் கால அட்டவணை ஒன்றைப் பரிந்துரைப்பார்.

நீங்கள் அண்மைக்காலத்தில் அவுஸ்திரேலியாவுக்கு வந்திறங்கியிருப்பின், மற்றும் உங்களது பிள்ளையின் நோய் எதிர்ப்புத்திறனூட்டல் பற்றிய சான்றுப்பதிவு மொழிபெயர்ப்புச் செய்யப்பட வேண்டுமாயின், அது தொடர்பில் அறிந்துகொள்ள Department of Social Services இன்

இணையத்தளத்திலுள்ள Free Translating Service பற்றி வாசித்து அறிந்துகொள்ளவும்

## Australian Immunisation Register

Australian Immunisation Register என்பது அவுஸ்திரேலியாவிலுள்ள அனைத்து வயதினருக்கும் வழங்கப்படுகின்ற தடுப்புமருந்துகள் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளதொரு தேசியப் பதிவாகும். இப் பதிவில் பொதுவான நடைமுறைகள் மற்றும் சமுதாய மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றினூடாக வழங்கப்படுகின்ற தடுப்புமருந்துகள் பற்றிய தகவல்கள் பதிவுசெய்யப்படுகின்றன.

நாங்கள் Australian Immunisation Register குறித்தான Medicare இல் பதிவைப் பெற்றுள்ள சிறுவர்களை தானாகவே இணைத்துக்கொள்கின்றோம்.

Australian Immunisation Register குறித்தான Medicare இல் பதிவைப் பெற்றுக் கொள்ளத் தகைமையற்ற பிள்ளைகளை, தடுப்பு மருந்து வழங்குனர்கள் (ஒரு பொது மருத்துவர் உள்ளடங்கலாக) குறித்த தடுப்புமருந்து பற்றிய விபரங்களை Australian Immunisation Register இற்கு அனுப்பிய பின்னர் அதில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

# மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

- **humanservices.gov.au/air** எனும் இணையப்பக்கத்திற்குச் சென்று மேலதிக தகவல்களை ஆங்கிலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- **humanservices.gov.au/yourlanguage** எனும் இணையப்பக்கத்திற்கு பிரவேசித்து வாசித்து அறிந்து கொள்ளும் வகையிலும் செவியுறக்கூடிய வகையிலும் மற்றும் காணொளிகள் மூலகமாகவும் உங்களுக்குரிய மொழியில் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- Centrelink கொடுப்பனவுகள் மற்றும் சேவைகள் பற்றி உங்களது மொழியிலேயே அறிந்துகொள்வதற்கு **131 202** இற்கு அழைப்பினை ஏற்படுத்தி எங்களுடன் பேசவும்.

- Medicare மற்றும் Child Support பற்றிய கொடுப்பனவுகள் மற்றும் சேவைகள் பற்றி அறிந்துகொள்ள உங்களது மொழியிலேயே எங்களுடன் பேசுவதற்கு **131 450** இற்கு அழைப்பினை ஏற்படுத்தி Translating and Interpreting Service (TIS National)ஐ வேண்டவும்.
- ஒரு சேவை வழங்கல் நிலையத்திற்குச் சமுகமளிக்கவும்

குறிப்பு: அவுஸ்திரேலியாவின் எப்பாகத்திலிருந்தும் உங்களது வீட்டுத் தொலைபேசியிலிருந்து '13' இலக்கங்களுக்கு மேற்கொள்ளப்படும் அழைப்புகளுக்கு ஒரு நிலையான கட்டணம் அறவிடப்படுகிறது. இது ஒரு உள்நாட்டு அழைப்புக்கான கட்டணத்திலிருந்து வேறுபடலாம் என்பதோடு ஒவ்வொரு தொலைபேசிச் சேவை வழங்குனர்களுக்கிடையிலும் வேறுபடலாம். உங்களது வீட்டுத் தொலைபேசியிலிருந்து '1800' இலக்கத்திற்கு மேற்கொள்ளப்படும் அழைப்பு இலவசமானதாகும். பொதுத் தொலைபேசிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளிலிருந்தான அழைப்புகள் நேர வரையறைக்கு உட்படக்கூடுமென்பதோடு, கூடிய கட்டணத்தையும் கொண்டிருக்கலாம்.

## பொறுப்புத் துறப்பு

இந்தப் பிரசுரத்தில் வழங்கப்படுகின்ற தகவல்கள் கொடுப்பனவு மற்றும் சேவைகளுக்கானதொரு வழிகாட்டியாக மாத்திரமே கருதப்படுகிறது. உங்களது குறித்த நிலைமைகள் தொடர்பாக ஒரு விண்ணப்பத்தை மேற்கொள்வதற்கும் ஒரு கட்டணத்திற்காக விண்ணப்பிப்பதற்கும் நீங்கள் விரும்பினால் அது பற்றித் தீர்மானிப்பது உங்களது பொறுப்பாகும்.

ENGLISH

# Immunisation

To get a family payment for a child under 20 years of age, you need to make sure their immunisations are up to date.

## What payments are affected?

- Child Care Benefit
- Child Care Rebate, and
- Family Tax Benefit Part A supplement

These changes will also affect customers who claim Grandparent Child Care Benefit, Special Child Care Benefit or Jobs, Education and Training Child Care Fee Assistance.

## Why immunise?

Immunisation keeps you and your children healthy and safe from harmful diseases. It’s simple, safe and effective.

## What do I need to do?

To meet the immunisation requirements, your child needs to:

- be up to date with their early childhood immunisations, or
- have a medical exemption.

We’ll check your child's immunisation details on the Australian Immunisation Register using their Medicare details.

Children who aren’t eligible to enrol in Medicare will be added to the Immunisation Register when a vaccination provider (including a general practitioner) sends the details of a vaccination to the Australian Immunisation Register.

Talk to your general practitioner if there’s a medical reason why your child can’t be vaccinated.

## How do I know if my child is up to date with their immunisations?

You can check your child’s immunisation history statement using:

- your Medicare online account through myGov. If you don’t have a myGov account, create one and link it to your Medicare online account
- the Express Plus Medicare mobile app. If you don’t have the app, download it from the App Store, Google Play™ and selected Windows 10 mobile devices and desktops.

Individuals 14 years of age or older can access their immunisation history statement:

- using or creating their own Medicare online account through myGov
- using the Express Plus Medicare mobile app or
- calling **1800 653 809.**

If there's information missing from your child's immunisation history statement, ask your vaccination provider to send it to the Australian Immunisation Register.

## Overseas vaccinations

If your child received vaccinations overseas, take proof of these to your Australian vaccination provider. They'll check your child has been given the correct vaccinations to meet the Australian National Immunisation Program Schedule.

If your child has met the National Immunisation Program Schedule, your Australian vaccination provider will update the Australian Immunisation Register.

If your child doesn't meet the National Immunisation Program Schedule, the vaccination provider will recommend a catch up schedule of vaccinations.

If you've recently arrived in Australia and need your child's immunisation evidence translated, read more about the Free Translating Service on the Department of Social Services website.

## Australian Immunisation Register

The Australian Immunisation Register is a national register that records vaccinations given to people of all ages in Australia. The register records vaccinations given through general practices and community clinics.

We will automatically include children enrolled in Medicare on the Australian Immunisation Register.

We will add children who aren't eligible to enrol in Medicare to the Immunisation Register when a vaccination provider (including a general practitioner) sends the details of a vaccination to the Australian Immunisation Register.

## For more information

- go to **humanservices.gov.au/air** for more information in English
- go to **humanservices.gov.au/yourlanguage** where you can read, listen to or watch videos with information in your language
- call **131 202** to speak with us in your language about Centrelink payments and services
- call the Translating and Interpreting Service (TIS National) on **131 450** to speak with us in your language about Medicare and Child Support payments and services
- visit a service centre.

Note: calls from your home phone to ‘13’ numbers from anywhere in Australia are charged at a fixed rate. That rate may vary from the price of a local call and may also vary between telephone service providers. Calls to ‘1800’ numbers from your home phone are free. Calls from public and mobile phones may be timed and charged at a higher rate.

## Disclaimer

The information contained in this publication is intended only as a guide to payments and services. It’s your responsibility to decide if you wish to apply for a payment and to make an application with regard to your particular circumstances.